DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 216/2014 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.4 |
| Name | :செல்வம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2023

-----

(எதிரிகள் 1முதல் 6 வரை ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் விக்கிரமங்கலம் நடுவூரில் குடியிருக்கிறேன். நான் JCB ஆபரேட்டராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி கருப்புவை மட்டும தெரியும். சுமார் 10 வருடத்திற்கு முன்பு சித்தனை மதியம் 1.00 மணிக்கு பார்க்க சென்றேன். நான் சித்தனை தேடி என்னுடைய பைக்கில் அவர்களின் வீட்டின் முன்பு நிறுத்தி விட்டு தோட்டத்திற்கு அவரை தேடிச்சென்றேன். அப்போது ஆஜர் எதிரி கருப்பும் மற்றொரு நபரும் சேர்ந்து வந்து சித்தனோடு சண்டை போட்டார்கள். நான் சென்று சண்டையை விலக்கி விட்டேன் பின்னர் ஊர்காரர்கள் வந்து விட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

ஆஜர் எதிரிகள் கடந்த 03.06.2013 மாலை 4.00 மணிக்கு ஆஜர் எதிரிகள் அங்கு கும்பலாக வந்து அ.சா.1யை எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் வந்து வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எப்படி கோவில் திருவிழா நடத்தலாம் என்று சொல்லி 1வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1யை செத்து தொலைந்து போ என வெட்டியதாகவும், 2வது எதிரி கம்பியால் அ.சா.1யை கம்பியால் அடித்து காயப்படுத்தியதாகவும் மற்ற எதிரிகள் 1,2எதிரிகளின் செயல்களுக்கு உடந்தையாக இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்து சம்பவத்தை விலக்கி விட்டதாகவும், போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 22.06.2023
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.